**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2019**

---

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிர்வாக தரப்பினரதும் பொறுப்புக்கள்.**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியபிரகாரம் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். அந்தசட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனமொன்று தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்பட வேண்டிய பிரகாரமான காலஎல்லைக்குள் அந்த நிறுவனங்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதியில் தயாரிக்கப்படுகின்றமை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களுக்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவுமற்றும் 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டம் | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சேமிப்புக் கணக்கில் ரூபா 51,262,544 தொகையான மீதி முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்று குறுங்கால மற்றும் நீண்டகால சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்று முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 753(1)மற்றும் (2) | 2018 மற்றும் 2019 கா.பொ.த.(சா.தரம்) மாணவர்களுக்காக ''பஸவடமு–ஹததினமு'' கைநூல் 22,500 எண்ணிக்கை, ரூபா 6,615,000 செலவில் அச்சிடப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருக்க வில்லை. | உரிய பாடவிதான புத்தகங்கள் வரிசை அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம் அச்சிடும் நடவடிக்கைகள் எமது நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தில் புத்தகங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதியளவான இடவசதிகள் காணப்படாமை மற்றும் அலுவலக உதவியாளர் இல்லாமை போன்ற சந்தர்ப்பங்களின் போது புத்தகங்களை விநியோகிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமையினால் தரை மாடியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும் நிறுவனத்தில் வெளிவாரி உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் எழுத்துமூல முற் கோரிக்கையின் அடிப்படையில் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (iii) | 2018 யூலை 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது இணைப்பு உதவியாளராக 12 பட்டதாரிகளுக்கு ரூபா 1,500 வீதம் ரூபா 1,253,700 தொகைமற்றும் 03 பயிலுனர் பயிற்சிபெறுனர்களுக்காக ரூபா 1,000 வீதம் ரூபா 221,975 தொகை சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 1300 மொழி பயிலுனர்களை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான பதவியணியினர் நிறுவனத்தில் காணப்படாமையினால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தற்காலிக அடிப்படையின் கீழ் இணைப்பு உதவியாளர்களினதும் பயிலுனர் பயிற்சியாளர்களினதும் சேவையை பெற்றுக் கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ''தன்னவனம் உகன்வன்ன–தன்னே நெத்தம் இகனகன்ன'' நிகழ்ச்சித்திட்டதை வானொலி மூலம் விளம்பரம் செய்வதற்காகவும், தொடர்புபடுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 15,323,972 தொகை மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 4,278,635 தொகை என்பன செலவிடப்பட்டிருந்ததுடன், இந்த சேவையினை பெற்றுக்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.2, 6.3.3, 8.9.1 மற்றும் 8.9.1(ஆ) வழிகாட்டிகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2016 ஆம் ஆண்டுமுதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதிவரை ''தன்னவனம் உகன்வன்ன–தன்னே நெத்தம் இகனகன்ன'' நிகழ்ச்சித் திட்டத்திற்காக வானொலி கூட்டுத்தாபனத்திற்கு விளம்பர செலவினமாக ரூபா 29,952,931 தொகைமற்றும் வானொலி நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்புபடுத்தல் நடவடிக்கைகளுக்காக தனியார் விளம்பர நிறுவனத்திற்கு ரூபா 7,439,125 தொகை என்பன செலுத்தப்பட்டிருந்தது. 07 வானொலி சேவை ஊடாக நாடு முழுவதும் இந்தநிகழ்ச்சித் திட்டம் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும், எதிர்பார்த்த பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டம் எவ்வளவு தூரம் பிரபல்யமானது மற்றும் எதிர்பார்த்த நோக்கங்கள் எவ்வளவு தூரம் அடையப்பட்டுள்ளது என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக முன்னைய ஆராய்ச்சி மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்படாமையினால் முறையான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், வருடாந்தம் நடைபெற்ற கா.பொ.த(சா.தரம்) நிகழ்ச்சித் திட்டங்களின் போது இதற்காக கூடிய வரவேற்பு கிடைத்திருந்தது. | நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 1800 மொழி பயிலுனர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 3,079,807 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,746,126 தொகை அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு முன்னர் செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டமையினால் இதுவரை செய்யப்பட்டரூபா 3,079,807 செலவினம் பயனற்ற செலவினமாக இருந்ததுடன், நிகழ்ச்சித் திட்டத்தில் இணங்கப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் மேலும்,ரூபா 28,705,303 தொகை செலுத்தவேண்டி இருந்தது. | முன்னாள் இருந்தவிடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் படிநிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. அது தொடர்பாக அமைச்சின் செயலாளருடனும் திறைசேரியின் உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடப்பட்டதுடன் அதனை தீர்த்துவைப்பதற்குஉள்ள நிதிதொடர்பாக குறித்த ஆலோசனையொன்று எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை. | ஊரிய அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் செலவினங்கள் செய்யப்படவேண்டும். |
| (iii) | நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 350,000 பெறுமதியான முச்சக்கரவண்டி 03 வருடகாலத்திலிருந்தும்,ரூபா 3,150,000 பெறுமதியான மோட்டார் கார் வாகனம் ஒன்று மீளாய்வாண்டின் போதும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கரவண்டி நிறுவனத்தில் வைப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்த்தல் தொடர்பாகவோ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br>வெற்றிடமாக காணப்படுகின்ற இரண்டு சாரதி பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டதன் பின்னர் உரிய மோட்டார் வாகனத்திற்காக சாரதி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்கு சொந்தான சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |
| (iv) | சரியான தேவையினை இனங்காணாமல் அகலவத்தை பயிற்சி நிலையத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,924 பெறுமதியான 02 சலவை இயந்திரங்கள் 2020 ஆம் ஆண்டில் ஆயுட்காலம் முடிவடையும் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டின் போது அகலவத்தை பயிற்சி நிலையத்தின் 02 விடுதிகளுக்காக பயன்படுத்தும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இது தொடர்பாக பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான தேவையினை இனங்கண்டதன் பின்னர் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். |

**(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 41 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 35 ஆகும். அதன் பிரகாரம் பதவியணியினரில் 06 வெற்றிடங்களின் எண்ணிக்கை அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட மட்டத்தின் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் முன்வராமையின் அடிப்படையில் இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்தின் பதவிகளுக்காக தேர்தல் நடவடிக்கைகளினால் நிரந்தரமாக ஆட்சேர்க்க முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |